REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மார்கழி 16உ வெள்ளி (31—12—54) ★ ★ வெளியூர்: மார்கழி 17உ சனி (1—1—55) [இதழ் 172

உலகப் பிரசித்திபெற்ற விஞ்ஞானி எழுதிய புத்தகம்: மூன்று பேரே படித்தனராம்!

150 பக்கம் கொண்ட புத்தகம் ஒன்றை உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞானி ஒருவர் எழுதியிருந்தும், அதை இதுவரையில் மூன்று பேர்தான் படித்திருக்கிறார்களாம்.

டாக்டர் சி. வி. ராமன் 'பிடில்' பற்றி எழுதியுள்ள புத்தகம் தான் அது; இப்புத்தகத்தை எழுதிய சி.வி. ராமன், அதை 'டைப்' செய்தவர், புத்தகத்தின் பிழைகளைத் திருத்தியவர்—ஆகிய மூவர் மட்டுமே இப்புத்தகத்தைப் படித்திருக்கிறார்களாம்; வேறு யாரும் இதுவரை அப்புத்தகத்தை வாங்கவில்லையாம்.

இச்செய்தியை சி. வி. ராமனே கூறினாராம்! விஞ்ஞானிகள் எழுதும் புத்தகத்தை பலர் படிப்பதே இல்லை என்றும் அவர் பொதுக்கூட்டமொன்றில் கூறினாராம்!

சென்னை பாதையில் பேச்சு!

பார்மோசா—ஒரு நாடல்ல!

ஜகார்தா, டிச. 30—

"பார்மோசா என்ற ஒரு தனி அரசாங்கமே கிடையாது; எத்தனை எத்தனையோ சிறிய தீவுகளில் ஒன்றுதான் பார்மோசா; செஞ்சீனு என்று குறிப்பிடப்படுவதுதான் சீனுவாகும்; ஜகார்தா மாநாட்டில் கலந்துகொண்ட எல்லா நாடுகளும், செஞ்சீனுவை அங்கீகரித்துக் கொண்டு விட்டிருக்கின்ற காரணத்தினுல்தான் செஞ்சீனுவுக்கு அழைப்பு அனுப்பி இருக்கிரும்."

இவ்வாறு, 'பார்மோசாவை இம் மாநாட்டில் கலந்துகொள்ள ஏன் அழைக்கவில்லை?' என்று இங்குள்ள நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், இந்தியப் பிரதமர் நேரு கூறியிருக் கிருர்.

ஆசியாவுக்கு உதவ அமெரிக்கத் திட்டம்

நியூயார்க், டிச. 29—

இந்தியாவின் அபிவிருத்திக்காக மானியத் தொகையாக 700 லட்சம் டாலர் ஒதுக்கும்படி, அமெரிக்க அதிகாரிகள், அமெரிக்கக் காங்கிரசைக் கேட்கலாமெனவும், இவ் விஷயம் 'முக்கியமான தேவைகள்' அடங்கிய பட்டியலில் இடம் பெற்றுளது எனவும் கூறப்படுகிறது.

அமெரிக்க சர்க்கார் உயர்தர அதிகாரிகள் நடத்திய பேச்சு வார்த்தைகளின்போது, பாகிஸ்தானுக்கு 410 லட்சம் டாலர் ஒதுக்குவதெனவும், மொத்தத்திலேயே அயல் நாட்டு இராணுவ பொருளாதார உதவிகளை 100 கோடி டாலருக்கு செய்துகொள்வது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் பார்மோசா, ஜப்பான், பிலிப்பைன், இந்தோ—சீனு, தாய்லாந்து, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இராணுவ உதவி மட்டிலும் 112 கோடி டாலர் மதிப்பில் அளிக்கப்படும் எனவும், பொதுவாக, கம்யூனிஸ்டல்லாத ஏனைய நாடுகளுக்குத்தான் இவ்வுதவித் திட்டத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதெனவும் தெரிகிறது.

திட்டமிடப்பட்டுள்ள இந்த மொத்தத் தொகையில் 80 சதவிகிதமும் ஆசிய நாடுகளுக்கே அளிக்கப்பட வேண்டுமெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதாம்!

இந்த இராணுவ உதவி மட்டுமில்லாமல், மிகப் பெரிய அளவில் பொருளாதார உதவி அளிக்கவும் திட்டமொன்று பற்றிய பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றனவாம்!

தூதுவர் பதவியை வெறுத்தாராம்!

கராச்சி, டிச. 28—

பாகிஸ்தான் பஞ்சாபின் முன்னுள் முதலமைச்சரான மும்தாஜ் தௌலத்தனு பாக். மந்திரி சபையில் அங்கம் பெற்றுள்ள சுஹரவர்த்தியின் தலைமையிலிருக்கும் அவாமி லீக்கில் சேர்ந்து பணியாற்றுவார் எனச் சொல்லப்படுகிறது.

அவர் தனக்குத் தரப்படுவதாயிருக்கும் பிரெஞ்சு நாட்டில் தூதுவராயிருக்கும் பதவியை வெறுத்துவிட்டு, அவாமி லீக் கட்சியில் சேர்ந்து அரசியலில் ஈடுபட எண்ணியுள்ளாராம்.

நாடக மூலம் காங்கிரஸ் தலைவர்கள் இழிவு செய்யப்படுவதைத் தடுக்க!

முற்போக்கு நாடகங்களுக்குப் பொன் விலங்கு

புதிய நாடக மசோதா நிறைவேற்றம்

ஆபாசம் மலிந்த, அராஜகம் விளைவிக்கிற, மானநஷ்டத்தை உண்டாக்குகிற நாடகங்களைத் தடை செய்வதற்காக, புதிய நாடக மசோதா ஒன்று பேச்சு சட்டசபையில் இன்று நிறைவேற்றப் பட்டுள்ளது.

"காங்கிரஸ் தேசியத் தலைவர்களை இழிவுபடுத்தி ஒழுக்கக் கேட்டினைத் திணிக்கின்ற நாடகங்களைப் பொதுவுடைமையினர் நடித்து வருவதால் ஏற்பட்ட சூழ்நிலைதான் இத்தகு நாடக மசோதாவைக் கொண்டுவருமாறு அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தியது," என எதிர்க் கட்சி உறுப்பினரான சர்தார் சிங் திவான் குறிப்பிட்டார்.

எதிர்க் கட்சியினர் ஒருவர் மசோதாவை ஆதரிக்க, காங்கிரஸ் உறுப்பினரான பகவத் சிங்கோ, மசோதாவை எதிர்த்து, எதிராக வாக்கும் அளித்தார்.

மேற்படி மசோதா, மக்களின் பேச்சுரிமைக்குத் தடை விதிக்கிறது என்றும், பிரஸ்தாப மசோதா 'அவதூருனது' என்றும், 'அதிருப்தி வளரச் செய்ய' ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு என்றும், மசோதாவை எதிர்த்து வாக்களித்த காங்கிரஸ் உறுப்பினர் தன் பேச்சில் குறிப்பிட்டார்.

பெங்களூர் மாநாடுகள் ஒத்திவைப்பு

பெங்களூரில், ஜன. 1, 2-ந் தேதிகளில் நடைபெறவிருந்த தி. மு. கழக மாநாடுகள் தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன என்று தந்தி மூலம் தோழர் உசேன் தெரிவித்துள்ளார்.

குறிப்பு:—மைசூர் மாநிலமெங்கும் சர்க்கார் மின்சார இலாகா தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதையொட்டி பெங்களூரில் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது; என்றாலும், விசேட அனுமதியின்பேரில் மாநாடு நடைபெறும் என்று தோழர் உசேன் தெரிவித்திருந்தார். இன்று வந்துள்ள தந்தி மூலம், விசேட அனுமதி கிடைக்கவில்லையெனத் தெரிகிறது. அதனுலேயே மாநாடுகள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

நடந்த 19, 20-12-54க் தேதிகளில் மாநாடு நடைபெற முடியாதவாறு அப்போதும் நகரில் உள்ள பட்டு ஆலை ஒன்றில் ஏற்பட்ட தகராறின் காரணமாக நகரில் 144 தடையுத்தரவு போடப்பட்டிருந்தது. அப்போது 1, 2—1—55-ந் தேதிகளில் மாநாடு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு வேலைகள் துரிதமாக நடைபெற்று வந்தன.

இப்போது நகரில் 144 தடையுத்தரவு விதிக்கப்பட்டிருப்பதால் மாநாடுகள் ஒத்திவைப்பது தவிர்க்க முடியாததாகிவிட்டது.—(ஆ-ர்)

கைத்தறியாளர் ஆதரவு வாரம்

ஜனவரி 7 முதல் 13 வரை

கைத்தறியாளரின் கண்ணீர் ஆட்சியாளரால் இன்னமும் துடைக்கப்படவில்லை. எனவே, அவர்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்கள் வாழ்வதற்கான சிறிதளவு வசதியையாவது செய்து கொடுக்க வேண்டியது, பொதுமக்களுடையதும், பொது மக்களைச் சார்ந்து நிற்கும் இயக்கங்களுடையதும் ஆன கடமையாக இருக்கிறது. அதனை நன்கு உணர்ந்ததால், திராவிட முன்னேற்றக் கழகம், தன்னுல் இயன்ற அளவு பணியினை வெற்றிகரமாகச் சென்ற ஆண்டுகளில் செய்து காட்டியிருக்கிறது. இவ்வாண்டும் ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகள் கடமையைச் செவ்வனே செய்து காட்ட வேண்டுமென்று கிளைக் கழகங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுதுள்ள நிலையில் கைத்தறியாளர்களின் துயரைப் போக்கக்கூடிய வகையில் செய்யக்கூடிய பணி, கைத்தறித் துணிகளை ஏராளமான அளவில் எல்லா வழிகளிலும் வாங்கும்படி பொதுமக்களைத் தூண்ட வேண்டியதாகும்; அதற்கான அரிய வாய்ப்பு, வருகின்ற பொங்கற் புது நாளாகும்.

பொங்கற் புதுநாளில் பொதுமக்கள் உடுத்தும் புத்தாடைகள் கைத்தறித் துணிகளாக இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்தியும், கைத்தறிப் பொருட் காட்சிகளை ஏற்பாடு செய்து கைத்தறித் துணிகளை வாங்கும்படி பொதுமக்களைத் தூண்டியும், கைத்தறித் துணிகளை தனிப்பட்ட முறையில் சென்றே, அல்லது ஊர்வலமாகப் போயோ விற்பனை செய்தும், கைத்தறித் துணி செலவழிவதற்கான கடமைகளைப் பொதுவாகப் பொதுமக்கள்—குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் புரிவார்களாக!

மேற்குறித்த கடமைகளைச் செய்வதற்கான முறையில், ஜனவரித் திங்கள் 7-ம் நாளிலிருந்து 13-ம் நாள் வரையிலுள்ள ஒரு வார காலத்தைக் கைத்தறியாளர் ஆதரவு வாரமாகக் கொண்டாடும்படி பொதுமக்களையும், திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளையும் வேண்டிக்கொள்கிறேன்.

கைத்தறியாளர் உள்ளங்களிலே மகிழ்ச்சி பொங்க, அவர்கள் இல்லங்களிலே பொங்கல் பொங்கட்டும்!

தலைமை நிலையம், 'அறிவகம்,'
இராயபுரம், சென்னை—13
31—12—54

சி. என். அண்ணுதுரை,
பொதுச்செயலாளர், திராவிட முன்னேற்றக் கழகம்

தடைகள் பெருகுகின்றன

சென்னை, டிச. 30—

சென்னை நகரில், தாஜ்மஹால் பீடித் தலைமைத் தொழிற்சாலை முன்பும், வண்ணாரப்பேட்டை, செம்பியம், பெரம்பூர் ஆகிய இடங்களிலுள்ள டிப்போக்கள் முன்பும் மறியல்கள் நடத்தப்படவிருக்கின்றன என்று தமக்குத் தெரியவந்ததாகக் கூறி, சென்னை நகர போலீஸ் கமிஷனர், மேற்கண்ட இடங்களில் அனுமதி (லைசென்ஸ்) இல்லாமல் கூட்டங்களோ, ஊர்வலங்களோ நடத்தக் கூடாதென தடையுத்தரவு பிறப்பித்துள்ளார். இத்தடை உத்தரவு, ஜனவரி திங்கள் 17-ந் தேதி வரையில் நீடித்திருக்குமாம்.

'எச்', 'கே' போலீஸ் பகுதிகளில், அதாவது 1 முதல் 6, 20 முதல் 23 வரையுள்ள நகர சபை எல்லைகளில் இந்த உத்தரவு அமுல் நடத்தப்படுமென்று கூறப்படுகிறது.

ஆசியப் பிரதமர்கள் கூட்டறிக்கை

பாகார் டிச. 30—

"ஆசிய—ஆப்பிரிக்க மாநாடுகூட்டுவதில் பிராந்திய 'கோஷ்டிகள்' சேர்க்க வேண்டுமென்ற நோக்கம் எதுவும் கிடையாது,"

என்று, ஆசிய - ஆப்பிரிக்க மாநாட்டைக் கூட்டுவதற்காக இங்கு கூடிப் பேசிய இந்தியா, பர்மா, இலங்கை, பாகிஸ்தான், இந்தோனேஷியா ஆகிய ஐந்து நாட்டுப் பிரதமர்களும் விடுத்துள்ள கூட்டறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அவர்கள், மேற்கு நியூகினியாவை இந்தோனேஷியாவுடன் இணைப்பதை ஆதரித்து, அதுசம்பந்தமான பேச்சுவார்த்தைகள் நடத்தி ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று கோரி, டச்சு சர்க்காருக்கு வேண்டுகோள் ஒன்றையும் விடுத்திருக்கின்றனர்.

டுனீஷியா, மொராக்கோ மக்களின் தேசிய சுதந்திரக் கோரிக்கையை அவர்கள் ஆதரித்து, அவர்களுக்கு சுய நிர்ணய உரிமை கொடுக்கப்பட வேண்டியது நியாயமே என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

ஆசிய—ஆப்பிரிக்க மாநாடுகளில் கலந்துகொள்ள இஸ்ரேலை அழைக்க வேண்டாமென்று அந்த ஐந்து பிரதமர்களும் முடிவெடுத்து விட்டனர்; அதிலும் பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி, 'இஸ்ரேல் இம்மாநாட்டிற்கு அழைக்கப்படக் கூடாது' என்று வற்புறுத்தினாராம்.

கூலி பெற்று வேலை செய்யும் தொழிலாளர்களைப் பெறுவதற்காக, கிராமப் பஞ்சாயத்துக்களையும், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் அமைப்பதின் மூலமாகவும், ஊதியமெதுவுமின்றி சேவையைப் பெறுவதற்கு சிரமதானத் திட்டமொன்றை வகுப்பதின் மூலமாகவும், கோசி நதி அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, மக்களின் ஒத்துழைப்பைப் பெற பாரத் சேவக் சமாஜ் உத்தேசித்திருக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 31—12—1954 வெள்ளி

அவர் தரும் அறிவுரை!

" கல்வியை, குழந்தைகளுக்கு கவர்ச்சிகரமானதாக, இன்பமானதாகச் செய்ய வேண்டும்; படிப்பு ஒரு பளுவாக குழந்தைகளுக்குத் தோன்றக்கூடாது; அதற்குத் தகுந்தவிதமாக ஆசிரியர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்,"

என்று, சென்னை சர்க்கார் கல்வி அமைச்சர் சேத்துப்பட்டில் நடைபெற்ற சென்னை மாநில தலைமை ஆசிரியர் மாநாட்டில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

'படிப்பு ஒரு பளுவாகத் தோன்றக்கூடாது — இன்பமானதாக இருக்கவேண்டும்'- நல்ல யோசனைதான். மனித வாழ்வே இன்பகரமானதாக இருக்க வேண்டுமென்றுதான் நல்லெண்ணம் கொண்டோர் விரும்புகிறார்கள்.

" காலையில் தெருக்களில் இசை நிகழ்ச்சிகள் இருந்தால், துயிலெழும்போது மனிதனின் மனம் மகிழும்," என்று, அன்பர் ஆச்சாரியார் சில நாட்களுக்கு முன்னர் யோசனை கூறவில்லையா? அது பெரியவர்களுக்கென்று சொல்லப்பட்ட யோசனை. கல்வி அமைச்சர் சொல்லியுள்ள யோசனை கல்வியைப் பற்றியது — இளஞ் சிறுர்களைப் பற்றியது!

'படிப்பு பளுவாகத் தோன்றக் கூடாது'—பாராட்டத் தக்க யோசனை; மாணவர் மீது அமைச்சர் கொண்டுள்ள அன்பின் எதிரொலி. இந்த நினைவு கல்வி அமைச்சருக்கு இரு ஆண்டுகளுக்கு முன் இருந்திருந்தால், ஆச்சாரியார் கல்வித் திட்டத்தை அன்று அவர் தீவிரமாக ஆதரித்திருக்க மாட்டார்.

மாணவர்களின்கல்வி இன்பகரமானதாக இருக்க ஆசிரியர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ளவேண்டும் என்று கல்வி அமைச்சர் ஆசிரியர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்.

ஆனால், ஆசிரியர்களில் பெரும்பான்மையோர் அமைச்சரின் வேண்டுகோளின்படி தங்களைத் தயார் செய்துகொள்ளும் நிலையில் இருக்கிறார்களா? அல்லது அந்த நிலை ஏற்படுமாறு கல்வி அமைச்சர் ஏதாவது காரியமாற்றியிருக்கிறாரா? அல்லது 'காரியமாற்றுகிறேன்' என்ற உறுதியாவது அளித்திருக்கிறாரா? எதுவுமில்லை.

ஆசிரியர்கள் அனைவரும், மாணவர்கள், கல்வியின் மீது வெறுப்படையுமாறு இப்போது ஏதாவது செய்துவிட்டார்களா என்ன? எதுவும் இல்லையே!

ஆசிரியர்களின் நிலை உயர்ந்தால், அமைச்சர் கோரிக்கைக்குச் சந்தர்ப்பம் இல்லாமலேயே நல்ல சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அந்த நிலை ஏற்படுவதற்கு ஆட்சியில் உள்ள சர்க்கார் ஆவன செய்ய வேண்டும்.

வறுமை நோயினல் பீடிக்கப்பட்டு, வேதனையுடன் காலந் தள்ளும் பெரும்பாலான ஆசிரியர்களின் ஏழ்மை ஒழிய வேண்டும்.

இவ்விஷயத்தில், காங்கிரஸ் சர்க்கார், ஆசிரியர்களின் கோரிக்கைகளைப் புறக்கணிப்பதுபோல் உலகில் வேறு எந்த அரசும் செய்வது கிடையாது.

காங்கிரஸ் தியாகிகளுக்கு நிலம் கொடுப்பதில் காங்கிரஸ் சர்க்கார் காட்டிய அக்கரையில் ஆயிரத்தில் ஒரு பங்கு அக்கரையாவது ஆசிரியர்கள் பிரச்னையில் காட்டியிருந்தால், 'ஆசிரியர்கள் சமுதாயத்'திலிருந்துவரும் ஏக்கத்தின் பெருமூச்சு தணிந்திருக்கக்கூடும்.

காலமெல்லாம் அவர்கள் உழைக்கிறார்கள்; எத்தனை தடவைகள் கோரிக்கைகள் அனுப்பினலும் சர்க்காரின் அன்புப் பார்வை அவர்கள் மீது விழுவதில்லை. அறிவுரை கூறும் கல்வி அமைச்சர் இதைக் கவனித்திருக்க வேண்டும்—அது, அவரது கடமையும் கூட!

'கல்வி, மாணவர்களுக்கு ஒரு பளுவாகத் தோன்றக் கூடாது,' என்றால், கல்வியென்பது ஆட்சியிலிருப்போர் சிலரின் எடுப்பார் கைப் பிள்ளையல்லவென்பதையும், கல்வித் திட்டம் என்பது ஆட்சியிலிருப்போருக்குத் துதிபாடும் கூட்டத்தார் மட்டுமே தீட்டித் தர வேண்டிய திட்டம் அல்ல என்பதையும் ஆட்சிபீடத்திலிருப்போர் உணர வேண்டும்.

கல்வித் திட்டம் ஒன்றை வகுக்க குழு ஒன்றை நியமனம் செய்வது—அதே நேரத்தில், காங்கிரசின் கொள்கைப் பிரசாரத்திற்காக மட்டுமே பயன்படும் ஆதாரக் கல்விப் பள்ளிகளை நாள்தோறும் அதிகரித்துக் கொண்டே போவது போன்ற முறைகள் கையாளப்படுகையில், கல்வி மாணவர்களுக்கு எவ்வாறு இன்பகரமானதாக இருக்க முடியும்?

கல்வி அமைச்சரின் துவக்க உரையில் கூறப்பட்ட யோசனைக்குப் பின்னர், மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய தோழர் குருவில்லா ஜாகப், கல்விப் பிரச்சினையில் ஆளும் கட்சியினரின் பொறுப்பு என்னவென்பதை வலியுறுத்தியிருக்கிறார்:—

" கல்வித் துறையில் அவசரப்பட்டு எந்த மாறுதலையும் செய்யக்கூடாது; அரைகுறை பயன் அளிக்கக்கூடிய திட்டங்களை மேலிருந்து திணித்து, மாணவர் — ஆசிரியர் — பெற்றோர் அனைவரையும் குழப்பத்தில் ஆழ்த்தக்கூடாது; சீர்திருத்தம், சீரமைப்பு அவசியந்தான்; ஆனல், அதில் ஆழ்ந்த ஆலோசனை, நிதானம் தேவை,"

என்று குறிப்பிட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் அவர்கள், குருவில்லா ஜாகப் கூறியுள்ள கருத்தை உணர்வாரானல், நிச்சயம் மாணவர்களின் வாழ்விலே இன்பம் தோன்ற வழி ஏற்படலாம்.

ஆழ்ந்த ஆலோசனை நிதானம் தேவை

புதியதோர் குலக் கல்வித் திட்டமொன்றை வகுத்து அதை, 'உலகம் பார்த்து வியக்கும் திட்டம்,' என்று புகழ்ந்தவர்கள், இச்சொற்களை மனதில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

'மாணவர்களுக்குக் கல்வி ஒரு பளுவாகத் தோன்றக் கூடாது,' என்பது, ஒன்றும் புதிய கருத்து அல்ல; கல்வி நிபுணர்களின் நோக்கமே அதுதான். ஆனல், அந்த நிலையை ஏற்படுத்துவது எப்படி என்பதுதான் ஆராய்ச்சிக்குரிய பிரச்சினை.

மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆசிரியர் தனி கவனம் செலுத்துவது அவசியம்,என்று கல்விப் பிரச்சினையில் ஆர்வம் உள்ளோர் அனைவரும் வற்புறுத்துகின்றனர்.

அகில இந்திய கல்வி மாநாட்டில் பேசிய டாக்டர் பி. ஆர். பராஞ்சிபே இதே கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்.

ஆசிரியர்கள், மாணவர் ஒவ்வொருவரின்மீதும் தனியாகக் கவனம் செலுத்த போதிய வாய்ப்புகள் நம் நாட்டுப் பள்ளிகளில் இல்லை.

ஒரே ஒரு ஆசிரியரையும், பல வகுப்புகளையும் கொண்ட பள்ளிகள் நம் நாட்டில் பல இருக்கின்றன; இப்பள்ளிகளில், எப்படி, ஆசிரியர் ஒவ்வொரு மாணவரையும் கவனிக்க இயலும்?

போதுமான ஆசிரியர்கள் இல்லாத பள்ளிகள் மாவட்டம் தோறும் காணப்படுகின்றன.

'பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைக்கவில்லை,' என்ற குறைபாட்டை நீக்க அரசாங்கம் எவ்வித முயற்சியையும் எடுக்கவில்லை.

இவை அனைத்தையும்விட முக்கியமான ஒன்று, குறைந்த சம்பளத்தில் வாழ்நாள் பூராவும் உழைக்க வேண்டியிருப்பதால், ஆசிரியர்களிடையே உற்சாகக் குறைவு இருப்பதுதான்.

இப்பிரச்சினைகளை எல்லாம் கல்வி அமைச்சர் கவனிக்க வேண்டும். கல்வி இன்பகரமானதாக இருக்க வேண்டுமென்று பொதுப்படையாக யோசனை கூறுவதுடன் நில்லாது, அந்தநிலை ஏற்பட என்ன மார்க்கம், ஏன் இப்போது அந்த நிலை இல்லை என்று சிந்திக்க வேண்டும்.

ஆட்சி புரியும் காங்கிரசார் முயன்றால், எந்தவித நன்மையும் செய்யலாம்; ஆனல், முயற்சி செய்வதற்குரிய நல்லெண்ணம் வேண்டுமே!

அந்த நல்லெண்ணம் உருவாகி, அது பயன் அளித்தால், 'ஆசிரியர்களே! உங்களைத் தயார் செய்துகொள்ளுங்கள்,' என்று அறிவுரை கூறவேண்டிய அவசியம் கல்வி அமைச்சர் போன்றோருக்குஏற்படாது!

"ஜனநாயகம் வாழ சமுதாய நீதி நிலைநிறுத்தப்பட வேண்டும்"

'பலர் துன்பத்தில் உழலுகையில் - சிலர் இன்பத்தில் திளைத்திருக்க முடியாது'

டாக்டர் இராதாகிருஷ்ணன் 'தத்துவார்த்த' உரை

அகமத்நகர், டிச. 28—

" சமுதாய நீதி நிலைநிறுத்தப்பட்டாலன்றி, இந்தியாவில் ஜனநாயகம் உயிர்வாழ்வது துர்லபமாகும்."

" பெரும்பாலானேர் துன்பங்களையும், ஏமாற்றத்தையும் மட்டும் அனுபவித்து அல்லல்பட்டுக் கொண்டிருக்கையில், சிலர் மட்டும் வாழ்க்கையில் எல்லா இன்பங்களையும், ஆடம்பரங்களையும் பெற்று, போக போக்கியத்தில் திளைத்திருப்பதென்பது முடியாது."

—இவ்வாறு உதவி ராஷ்டிரபதி டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், அகமத்நகர் நகரசபையின் நூற்றாண்டு விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில், மக்களுக்கு நாட்டின் செல்வம் சமமாகப் பங்கிட்டுத்தரப்பட வேண்டுமென்பதையும், எல்லா வகுப்புமக்களுக்குவாழ்வின்சகல துறைகளிலும் சம சந்தர்ப்பங்கள் தரப்பட வேண்டுமென்பதையும் வலியுறுத்தினர்.

" எல்லா மக்களுடையவும் தனிப்பட்ட உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்; ஆனல் அவை, சமுதாய நலத்திற்குகந்த வகையில் திருத்தியமைக்கப்படும்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், " ஒரு நகரசபையின் உறுப்பினர்கள், ஸ்தல சுயாட்சி லட்சியங்களுக்கொப்ப நடந்துகொள்கிறார்களா என்பதை எல்லா நகர மக்களும் கண்காணித்துக் கொள்ள வேண்டும்," என்றும் கூறியிருக்கிறார்.

நெய்வேலி நிலக்கரி ஆராய்ச்சியில் நல்ல முன்னேற்றம்

ஐ. நா. பொருளாதாரக் குழுவின் அறிக்கை

பாங்காங், டிச. 28—

" நெய்வேலி நிலக்கரி பற்றிய ஆராய்ச்சியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது,"

என்று, ஐ. நா. சபையின் ஆசிய தூரகிழக்குப் பொருளாதாரக் குழு, தன் அறிக்கையில் கூறியிருக்கிறது

" கனிப் பொருள்கள் பற்றிய பிரச்சினை இந்தியாவில் அதிக முக்கியத்துவம் அடைந்து வருகிறது," என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

1953-ல் இந்தியாவில் கனிப் பொருள்கள் ரூ. 48,85,15,054க்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாம்.

1952-ல், ஏற்றுமதி குறைந்தது என்றும், ரூ 45,34,27,363-க்குத் தான் 1952-ல் ஏற்றுமதி செய்யப் பட்டதென்றும் ஐ நா. குழுவின் அறிக்கை கூறுகிறது.

இந்தியா இப்போது மைகா, மாங்கனீஸ், நிலக்கரி, இரும்பு, மணல், குரோமைட், மாக்னஸைட், சயனைட் ஆகியவைகளை ஏற்றுமதி செய்கிறதாம்.

எண்ணெய், கந்தகம், கந்தகச் சேர்க்கையில்லாத உலோகங்கள் ஆகியவை இந்தியாவில் பற்றாக் குறைதானும்.

பெட்ரோலியம் தொழில் 1953—54ல் நன்றாக அபிவிருத்தி அடைந்ததாம்.

நிலக்கரி உற்பத்தியில் எதிர் பார்க்கப்பட்ட அளவான 3,64,00,000 டன்கள் கிடைக்கவில்லை என்றும், வெளிநாட்டில் நிலக்கரி கிடைப்பதில் மிகுந்த தொல்லையும் இருந்ததென்றும் கூறப்பட்டுள்ளது.

இரும்புத் தொழிலில் அதிக அளவு முன்னேற்றம் ஏற்பட்டதென்று சொல்லப்படுகிறது.

இரும்பு உற்பத்தி 1952-ல் 34,56,000 டன் என்றும், 1953ல், 36,12,000 டன் என்றும் தெரிகிறது.

வெளியேற்றினர்

கல்கத்தா—

'அகில இந்திய பார்வர்ட் பிளாக்' கட்சியிலிருந்து பண்டிட் ஷீல்பத்திர யாஜியையும், ஜெனரல் மோகன் சிங்கையும் வெளியேற்றிவிடுவதென இங்கு நடைபெற்ற அக்கட்சியின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாம்.

'அகில இந்திய பார்வர்ட் பிளாக் ஒரு அதிகாரபூர்வமில்லாத கட்சி' என்று பண்டிட் யாஜியின் குழுவினர் எதிர்த்து வருவதே அவர்கள் இருவரும் வெளியேற்றப் பட்டதின் மூல காரணமாகுமென்று கூறப்படுகிறது.

தற்காலிகமாக அக்கட்சித் தலைவராக ஹேமந்த போஸ் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் எனவும், கட்சியின் அடுத்த மாநாடு கூடும்வரையில் அவரே தலைமைப் பீடத்திலிருப்பார் எனவும் தெரிகிறது.

பதினைந்து அயல்நாட்டு பாங்கிகள் 1954 அக்டோபர் மாத இறுதியில் இந்தியாவில் அலுவல் நடத்தி வந்தன. இன்சூரன்ஸ் சட்டத்தின் கீழ் பதிவாகியுள்ள அயல்நாட்டு இன்சூரன்ஸ் கம்பெனிகளின் எண்ணிக்கை 1954 நவம்பர் 15-ந் தேதியன்று 104 ஆக இருந்தது.

குறளின் மேன்மை பற்றி கவிதை புனையுங்கள்!

தமிழ்நாட்டுசிந்தனையாளர்களுக்கு வேண்டுகோள்

" திருக்குறளின் மேன்மை பற்றி தமிழ் நாட்டில் உள்ள சிந்தனையாளர்களும், கவிஞர்களும், கவிதைகள் இயற்ற வேண்டும்,"

—என்று, மதுரையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

மதுரையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில், திருக்குறள் பற்றி ஆராய்ச்சி செய்து, அவைகளை வெளியிட வேண்டுமென்று சென்னை, அண்ணமலை ஆகிய பல்கலைக் கழகங்களைக் கோரி, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மக்களின் நன்மைக்காக குறளை குறைந்த விலையில் புத்தகமாக வெளியிட வேண்டுமென்று மாதிபதிகளைக் கோரி, மற்றோர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது

இந்த மாநாட்டில் க. அன்பழகன், கே. திருமாறன், திருமதி என். சரோஜினி, ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாநாட்டிற்கு எம். இராஜமாணிக்கனர் தலைமை தாங்கினர்.

தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் திருக்குறள் மாநாட்டின் நிகழ்ச்சிகளை ஒலி பரப்புமாறு அகில இந்திய வானெலி இலாகாவைக் கேட்டு தீர்மானம் ஒன்றும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது

இந்தியின் ஆதிக்கம் நிலைத்துவிட்டதாம்

பாராளுமன்றத்தில் தென்னிந்திய உறுப்பினர்கள் தொல்லை!

"தவிர்க்க முடியாதது" என்கிறார் மாவ்லங்கர்

இப்போது நடைபெற்று முடிவடைந்த பாராளுமன்றக் கூட்டத்தில் இந்திமொழியின் ஆதிக்கம் வலுப்படுத்தப்பட்டு நிலைத்துவிட்டதென்று தெரிகிறது.

'15 ஆண்டுகளில் இந்தி தேசிய மொழியாக வேண்டும்,' என்று கூறும் அரசியல் சட்டத்திற்கு, பாராளுமன்ற உறுப்பினர்கள் விசுவாசம் தெரிவித்திருக்கின்றனர் என்று மக்கள் சபைத் தலைவர் மாவ்லங்கர் கூறினார்.

பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் உள்ள தென் இந்திய உறுப்பினர்கள் பலர் இப்போக்கை ஆணித்தரமாக எதிர்த்தார்களாம்.

தென் இந்திய சிந்தனையாளர்கள் இப்பிரச்சினை பற்றி சிந்திக்கிறார்களாம்.

எதிர்க் கட்சியில் உள்ள தென்னிந்திய உறுப்பினர்கள் சிலர், சமரச யோசனை ஒன்று கூறுகிறார்களாம்.

ஐ. நா. சபையில் உள்ளது போல், தனி ஒலிபெருக்கிகள் மூலம் சேர்ந்தாற்போல் பேச்சுகளை மொழி பெயர்க்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கூறப்படுகிறதாம்.

இந்த யோசனையின் அடிப்படையைக் கூட இந்திய சர்க்கார் ஒப்புக்கொள்ளும் என்பதற்கு அறிகுறி எதையும் காணோம் என்று சொல்லப்படுகிறது.

இந்தி மொழி அறியாத உறுப்பினர்கள், அதனால் ஏற்படும் தொல்லையைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்று உறுப்பினர்களிடம் மாவ்லங்கர் கூறிவிட்டார்.

அமைச்சர்களின் சொற்பொழிவுகள், கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்கள், அறிக்கைகள் இவைகளைப் பின்பற்ற முடியாமல் தவிக்கும் இந்தி மொழி அறியாத தென்னிந்திய உறுப்பினர்கள் தொல்லையை அனுபவிப்பது தவிர்க்க முடியாதது என்றும் மாவ்லங்கர் கூறிவிட்டாராம்.

'பீகிங் மனிதனி'ன் வெள்ளி விழா!

பீகிங்கில் உள்ள சீன விஞ்ஞானக் கழகத்தினர் 'பீகிங் மனிதனி'ன் 25-வது ஆண்டு விழாவை டிச. 27-ந் தேதியன்று கொண்டாடினர்.

'பீகிங் மனிதன்' என்பது, 25 ஆண்டுகளுக்கு முன்பு கண்டு பிடிக்கப்பட்ட மண்டை ஓடு ஒன்றும், சில எலும்புகளுமாகும்.

இவை உலகத்திலேயே மிகவும் பழமையானது என்றும், 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனிதனுடையது என்றும் சீனர்கள் கூறுகின்றனர்.

உலகில் மிகப் புராதனமானது என்று கருதப்படும் 'ஜாவா மனிதனை'விட, 'பீகிங் மனிதன்' மிகவும் பழமையானவன் என்று சீன விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இந்த 'பீகிங் மனிதன்' நெருப்பை உண்டாக்க சக்கிமுக்கி கல்லை உபயோகித்தான் என்றும் கூறப்படுகிறது; அவன் மனிதப் பண்புடன் வாழ்ந்தானாம்.

1929-ல், இந்த மண்டை ஓட்டைக் கண்டு பிடித்த டாக்டர் வென்-சுங் இந்த விழாவில் அறிக்கை ஒன்றைப் படித்தார்.

மொராக்கோவில் அறுவர் கொல்லப்பட்டனர்

ராபட், டிச. 28—

மொராக்கோவில் மீண்டும் கலகக்காரர்கள் 'பலாத்கார'ச் செயல்களில் ஈடுபட்டுவருவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

ஒரு பிரெஞ்சுக்காரர் உட்பட ஆறுபேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

சென்னையில் திராவிடர் திருநாள்

தவணை நீடிப்பு

திராவிடர் திருநாளன்று நடக்கவிருக்கும் போட்டிப் பந்தயங்களில் தங்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ள 31—12—54-ந் தேதியை இறுதி நாளாக அறிவிக்கப்பட்டிருந்ததை மாற்றி, 7—1—55-ந் தேதி வரையில் நீடித்துவைக்கப்பட்டுள்ளதென்பதை கழகத் தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் தோழர்கள் (சிறுவர் சிறுமியர் உள்பட) நீடிக்கப்பட்டிருக்கும் தவணையைப் பயன்படுத்திக் கொண்டு, சென்னை இராயபுரம் 'அறிவக'த்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறோம்," என்று சென்னைமாவட்ட தி. மு. க. செயலாளர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

★

கடலூரில் திராவிடர் திருநாள்

13—1—55 காலையிலும் 17—1—55 மாலையிலும், பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, தி. மு. க. தலைவர்களின் அறிவுரை விருந்து ஆகியவைகளை, கடந்த ஆண்டுபோல நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

"பெரிய மனிதர்" என்ற நாடகம் 20-ம் நூற்றாண்டு கலைக் குழுவினரால் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. விழாக் குழுவின் தலைவராக தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. அவர்களும், துணைத் தலைவராக தோழர் ஆர். சுந்தரம், எம். சி. அவர்களும், செயலாளர்களாக தோழர்கள் வை. சரவணன், கே. ஜி. சாமிநாதன், எஸ். அஜீஸ், ஏ. கோவிந்தன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வியாபாரி இல்லாத விற்பனை நிலையம்

வெளிகுருலா, டிச. 29—

'வியாபாரி இல்லாத கடை' ஒன்று இங்கு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறதாம்.

கடந்த வாரத்தில் 'ராஷ்ட்ர சேவா தளம்' என்ற ஒரு சமூக நிறுவனம் ரூ. 70 பெறுமான சாமான்களை உடைய கடை ஒன்றைத் திறந்துவைத்தது; அக்கடையில் யாரும் விற்பனையாளராக இருக்கவில்லை.

பொது மக்கள் தாங்களாகவே கடைக்குள் நுழைந்து தங்களுக்குத் தேவையான பொருள்களை அதில் குறிப்பிட்டிருக்கும் விலை மதிப்பிற்கு பணம் வைத்துவிட்டு எடுத்துச் சென்றனர்.

மக்களின் ஒழுக்கம், தரம்பெற்றிருப்பது கண்டு திருப்தியடைந்துள்ள அந்த சமூக நிறுவனத்தார், தொடர்ந்து அந்தக் கடையை நடத்த எண்ணியுள்ளார்களாம்.

ஷெட்யூல்ட் குடிகள் நல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும், ஷெட்யூல்ட் பிரதேசங்களின் அபிவிருத்திக்காகவும், மத்திய சர்க்கார் நடப்பு ஆண்டில் இதுவரை சுமார் 317 லட்ச ரூபாய் அனுமதித்திருக்கின்றனர்.

திண்டுக்கல், இடையகோட்டையில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை

முன்னணி வீரர்கள் முழக்கம்

திண்டுக்கல், டிச. 30—

25—12—54 மாலை 6-30 மணியளவில், திண்டுக்கல் தி. மு. கழகச் சார்பில் வ. உ. சி. திடலில் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில் குழுமியிருந்தனர். கூட்ட ஆரம்பத்தில் தோழர் அனீபா குழுவினரின் திராவிடப்பண் இசை நிகழ்ச்சிகள் பக்கவாத்தியங்களுடன் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் கே. ஏ. மதியழகன், பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியோர் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கி விரிவுரை ஆற்றினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூற, கூட்டம் இனிது கலைந்தது. பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கட்குப் பல கிளைக் கழகங்கள் சார்பில் மலர் மாலைகள் சூட்டப்பட்டன.

* * *

இடையகோட்டை, டிச. 30—

26—12—54 மாலை 5 மணிக்கு இடையகோட்டை தி. மு. கழக (கிளை) முதலாண்டு நிறைவு விழா முத்துக்குமாரசாமி படித்துறையில் அமைக்கப்பெற்ற மேடையில் தோழர் கே. எஸ். இலட்சுமிபதி எம். எல். ஏ. தலைமையில் நடைபெற்றது. கூட்டத் துவக்கத்தில் தோழர் நாகூர் அனீபா இன்னிசை வழங்கினார். தலைவர் முன்னுரைக்குப்பிறகு தோழர்கள் மதுரை எஸ். முத்து, எம். பி. சுப்பிரமணியம், எம்.எல்.ஏ., அ. பொன்னம்பலனார், கே. ஏ. மதியழகன், பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியவர்கள் தி. மு. கழக இலட்சியங்களையும், காங்கிரஸ் ஆட்சியினால் மக்களுக்கு நேரிட்ட இன்னல்களையும் விளக்கிவிட்டு மேலும் பேசியதாவது:—

"தென்னகத்தில் நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க திட்டங்கள் எதும் ஆட்சியாளர்களால் சரிவரத் தீட்டப்படவில்லை; ஆனால், வடவர் ஆதிக்கத்தை மேலும் மேலும் வலுப்படுத்த ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. வடநாட்டை வளமிக்க நாடாக்க இரண்டாயிரம் கோடி ரூபாய் செலவில் அணைக்கட்டுகள், தொழிற்சாலைகள் கட்ட டில்லி ஆட்சிபீடம் முன்வந்துகொண்டிருக்கிறது. சென்னை சர்க்காரோ, இங்கிருந்து வசூல் செய்யப்பட்ட பணத்தையெல்லாம், ஏஜெண்டு போல் வடநாட்டிற்கு அனுப்பிவிட்டு, பிறகு அவர்கள் முன் கைகட்டி, வாய்புதைத்து நிற்பதைத் தவிர வேறு வழியில்லாமல் திண்டாடுகிறது; இந்நிலை மாறி, தென்னாட்டு மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி தோன்ற 'திராவிட நாடு திராவிடருக்கு' ஆக வேண்டும்," என்றனர்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கட்குப் பல கிளைக் கழகங்கள் சார்பில் வரவேற்பு மடல்கள் வாசித்தளிக்கப்பட்டு, மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. கழக ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. விழாவினையொட்டி பகலில் கஞ்சியும், கூட்ட முடிவில் ஏழை மக்கட்கு ஆடைகளும் வழங்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப் பின்னர், நாகூர் அனீபா திராவிடப் பண் பாடினார்.

* * *

பெயர் சூட்டல்

25—12—54ல், திண்டுக்கல்லில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், தோழர் ஞானானந்தம் அவர்கள் குழந்தைக்கு 'வீரமணி' என்றும், தோழர் வி. பி. செனடய்யா அவர்கள் புதல்விக்கு 'மரகதம்' என்றும் பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சி கருதி, ஒவ்வொருவரும், தனித் தனியே ரூ. 2 நன்கொடை அளித்தனர். வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

அதே கூட்டத்தில், தோழர் வெ. முத்து அவர்கள் புதல்விக்கு 'மல்லிகா' என்றும் பெயர் சூட்டினார்.

சௌந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

14—12—54 மாலை 6 மணிக்கு பம்பாய்—தாராவி வ. உ. சி. திடலில் மேற்படி மன்ற முதலாண்டு நிறைவு விழா தோழர் சா. தருமராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர் மா இரா. குறள்தாசன் விழாவைத் துவக்கி வைத்தார். தோழர்கள் புத்தரசு, சு. வள்ளிநாயகம் ஆகியோர் சொற்பொழிவாற்றியதும், தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்கள், கடந்த 25 ஆண்டு காலத்துக்கு முன்னால் சௌந்திர பாண்டியனார் தமிழ் மக்களிடையே செய்துவந்துள்ள பகுத்தறிவு சேவைகளைப் பற்றி சொற்பொழிவாற்றினார். அவருக்குப் பல கிளைக் கழகங்கள், தனிப்பட்டோர் சார்பில் மலர்மாலைகளும் கைத்தறி துணிகளும் அணிவிக்கப்பெற்றன. பின்னர், சென்னை நாடக சட்டத்தைக் கண்டித்தும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பழனி இளைஞர் தி. மு. க.

15—12—54ல் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் அடுத்த ஆண்டு மார்ச்சு திங்கள் இறுதி வாரத்தில் இங்கு இளைஞர் தி. மு. கழக முதல் ஆண்டுவிழாவும், இளைஞர் தி. மு. கழக முதல் மாநாடும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

புகளூர் சர்க்கரை ஆலை தொழிலாளர் சங்கம்

26—12—54 மாலை 7 மணிக்கு தோழர் டி. பி. மூர்த்தி தலைமையில் நடைபெற்ற செயற் குழு கூட்டத்தில், தொழிற் சங்கத்தின் கோரிக்கைகளை, தகுந்த முறையில் நிறைவேற்ற ஆலை நிர்வாகம் மறுத்துவிட்டதால் 3—1—55-ல் தொழிலாளர்கள் 'வேலை நிறுத்த வாக்கெடுப்பு' நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

சென்னை மாணவர் மன்றம்

19-12-54ல், சென்னை இந்தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளியிலிருந்து வடநாட்டுக் கலைப் பயணத்துக்குச் சென்ற 40 ஆசிரியர்களை வழியனுப்பும் விழா, சென்னைக் கல்வித் துறைத் தலைவர் திரு. என். டி. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் திருமதி எஸ். தருமாம்பாள் அம்மையாரும், தோழர் மயிலை — சிவமுத்துவும் கலந்து கொண்டனர். இரவு 9 — மணிக்குச் சென்டிரல் புகை வண்டி நிலையத்துக்கு, மாணவர் மன்ற உறுப்பினர்கள் சென்று, கலைப் பயணக் குழுவினருக்கு இனிப்புப் பொருள் தந்து வாழ்த்தி வழியனுப்பினர்.

பம்பாய்—தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம்

20—12—54-ல் திரு. பி. என். அருணாசலம் தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்க அமைப்புக் கூட்டத்தில், தோழர்கள் பலர் பேசியபின், தொழிலாளர்களுடைய தற்போதைய மாதச் சம்பளமான 80 ரூபாயை, 85 ரூபாயாகவும், தினசரி சம்பளத்தை 4 ரூபாயாகவும் கேட்பதென்று முடிவு செய்யப்பட்டது.

இலங்கையில் டி. கே. எஸ். சகோதரர்கள்

23-12-54 பிற்பகல் 3-30-க்கு, டி. கே. எஸ். சகோதரர்கள், தங்கள் குழுவினருடன் விமான மூலம் இலங்கைக்கு வந்து சேர்ந்தார்கள். கொழும்பு விமான நிலையத்தில் திரளான மக்கள், குழுவினரை மாலை சூட்டி வரவேற்றனர். மாலை 6 மணிக்கு இந்து கல்லூரி சரஸ்வதி மண்டபத்தில் டி. கே. எஸ். குழுவினருக்குத் தேநீர் விருந்து நடைபெற்றது.

மன்னார்குடி நகர டீ ஸ்டால் வியாபாரிகள் சங்கம்

20—12—54 இரவு 9 மணிக்கு செல்வம் டீ ஸ்டால் எதிர்மாடியில், திரு. டி. டி. விஸ்வபெருமான் தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்க ஆரம்ப விழாவில், சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— தலைவர்: டி. டி. விஸ்வபெருமான்; துணைத்தலைவர்: எஸ். ராஜகோபால்; செயலாளர்: வேலு; பொருளாளர்: வி. முருகையன்; கமிட்டி உறுப்பினர்கள்: கோபாலசாமி ரவுத், ரத்தினம், ஜனுப் இமாம், சரவணன், ஏ. டி. ராஜன், நாராயணசாமி, ரங்கசாமி, டி. கணபதி, சுந்தரம், குருசாமி, பழனிவேல், குமரப்ப முதலியார்.

பின்னர் முடிவுகள் பல செய்யப்பட்டன.

பம்பாயில் தமிழ் விழா

24—12—54 மாலை 7 மணிக்கு பம்பாய்—மாதுங்காவில், பம்பாய் தமிழ்ச் சங்க ஆதரவில் நடைபெற்ற தமிழ் விழாவுக்குத் தலைமை தாங்கிய திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கட்கு பம்பாய் தமிழ்ச் சங்கம், இளைஞர் முன்னேற்றக் கழகம், மற்றும் பல சங்கங்கள் சார்பில் மலர் மாலைகளும், வரவேற்பிதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தமது தலைமையுரையில், தமிழ் மக்கள் எவ்விடத்திலிருந்தாலும் தமிழ்ப் பண்பை பாதுகாத்து வளர்க்கவேண்டுமெனவும், தங்கள் மொழிப் பற்றையும் நாட்டுப் பற்றையும் மறவாதிருக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகம்

26—12—54 காலை 9 மணியளவில் தோழர் டி. என். சிவராசன் தலைமையில் நடைபெற்ற சென்னை சூளை சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பக செயற்குழுக் கூட்டத்தில், படிப்பக வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், சென்னை மாவட்ட தி. மு. கழகம் நடத்தும் திராவிடர் திருநாள் விழாவிற்கு இயன்றளவு பொருளுதவி செய்வதென்று முடிவு செய்யப்பட்டபின் தோழர் டி. என். சிவராசன் மகள் மல்லிகா இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. பின்னர் 10—10—54ல் பெரம்பூர் லட்சுமி தியேட்டரில் நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தின் வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டு வேறு சில முடிவுகளும் செய்யப்பட்டன.

மன்னார்குடியில் கண்டனக் கூட்டம்

26—12—54-ல் இவ்வூர் தேரடியில், தி. மு. கழகச் சார்பில் தோழர் இரா. கணேசன் தலைமையில் நடைபெற்ற புதிய நாடக சட்டக் கண்டனப் பொதுக்கூட்டத்தில், புதிய சட்டத்தைக் கைவிடுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தி தோழர்கள் ப. நாராயணன், எஸ். எம். வைத்திலிங்கம், பி. எஸ். பி. சாமி ஆகியோர் பேசியபின், புதிய சட்டத்தை கைவிடுமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'இராமாயணம்' குறித்து வாதிடத் தயாரா?

ஆச்சாரியாரும் சுப்பிரமணியமும் முன்வருவார்களா?

தோழர் இரா. நெடுஞ்செழியன் அறைகூவல்

"'மனம் புண்படுகிறது' என்ற காரணத்திற்காக நாடகத் தடைச் சட்டம் வந்திருப்பதாக கனம் சுப்பிரமணியம் கூறுகிறார். சிலரின் மனம் புண்படுகிறது என்பதற்காகவே ஒருநாடகம் நடத்தப்படக்கூடாது என்று சொன்னால், பலரின் மனம் புண்படுகிற காரியங்கள் எத்தனை எத்தனை இந்த காங்கிரஸ் ஆட்சியாளர் செய்திருக்கின்றனர்?

"அரிசனங்களை கோவிலுக்குள் அழைத்துச் சென்றார்களே, அது கண்டு, வைதீகப் பெருமக்கள் மனம் மகிழவா செய்தார்கள்?

"பத்து ஆண்டுகட்கு முன் ஸ்ரீரங்கத்தில் ஆலயப் பிரவேசம் நடத்திவிட்டுக் கூட்டத்திற்குப் பேசச் சென்றார்கள், ஆச்சாரியாரும், காலஞ் சென்ற டி. எஸ். எஸ். ராஜனும்; என்ன ஆயிற்று? அந்த ஊரிலிருந்த பார்ப்பனர்கள்—பெண்கள் உட்பட—ஒன்று சேர்ந்து, மிளகாய்ப் பொடியை கூட்டத்தில் தூவி, பலரின் கண்களை கலங்கடித்துக் கூட்டத்தையே நடக்கவொட்டாது செய்துவிடவில்லையா? 'ஆலயப் பிரவேசம்,' அந்த பக்தர்களின் மனதைப் புண்படுத்துகிறது என்ற காரணத்தினாலேயே நடைபெறாமலா போயிற்று?

"மது விலக்கைக் கொண்டுவந்தார்கள்—எத்தனை குடிகாரர்களின் மனம் புண்பட்டிருக்கும்? இருந்தாலும் அது நடைமுறையிலிருக்கிறதே!

"நடைபெற்றுள்ள காரியங்களைக் குறிப்பிட்டுக் கேட்டால், 'ஆலயப் பிரவேசமும், மது விலக்கும் பொது நன்மைக்கான நல்ல சீர்திருத்தம்,' என்று கூறுகிறார்கள்; அப்படியானால், 'எங்கள் 'இராமாயணம்' நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டது அல்ல' என்று வேண்டுமானால், துணிவிருந்தால் கூறலாமேயன்றி, 'சிலர் மனம் புண்படுவதால் தடுக்கச் சட்டம் கொண்டுவருகிறேன்,' என்று கூறுவது எப்படி நியாயமாகும்?

"'நாங்கள் கூறுகிற 'இராமயணம்,' நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டது அல்ல,' என்று வாதாடத் தயாரா?—மந்திரி சுப்பிரமணியமோ, அல்லது அவரது குரு ஆச்சாரியாரோ? வேண்டுமானால், நான் வருகிறேன் அவர்கள் வீட்டிற்கு—அல்லது ஒரு பொது இடத்தில் சந்திப்போம்; விவாதிப்போம்.

"உண்மையிலேயே இராமன், கடவுள் அவதாரம்தான்—போக்கியன்தான் என்றும்; சீதை, நிலைதவறியவள் அல்ல—கற்புக்கரசிதான் என்பதிலும் பக்தகோடிகளுக்கும், ஆச்சாரியார்களுக்கும் நேர்மையான நம்பிக்கையிருந்தால், 'பிறர் பழித்தாலும், இழித்தாலும், எங்கள் இராமனும், சீதையும் குறைந்துவிடமாட்டார்கள்; அவர்களை யாராலும் மாசுபடுத்த முடியாது; நாங்கள் கூறுவதே நிலைக்கும்,'; என்று உண்மையிலேயே அவர்கள் நம்பிக்கைக் கொண்டிருப்பார்களானால், 'மனம் புண்படுகிறது,'' எனக் குதிப்பானேன்? துள்ளுவானேன்?

"ஆச்சாரியாருக்கும், பக்தகோடிகளுக்கும் 'தங்கள் கருத்துத்தான் உண்மை; என்றென்றும் நிலைத்து நிற்கும் தன்மை பெற்றது,' என்ற நம்பிக்கை இல்லாததினால்தானே, 'இராமாயண'த்தைப் பற்றிப் பிறர் விமர்சிக்கும்போது, அலறித்துடிக்கிறார்கள்! அந்த மாற்றுக்கருத்துக்களைக் கூற விடாது தடுக்கச் சட்டம் இயற்றுகிறார்கள்!"

—இவ்வாறு, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை ஓட்டேரியில், வ. உ. சி. மன்றத் திறப்பு விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

30-12-54 வியாழனன்று மாலை சென்னை ஓட்டேரியில் வ. உ. சி. மன்றத் திறப்பு விழாக் கூட்டம் நடைபெற்றது.

தொழிலாளர் பேட்டையான அப்பகுதியில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில், பல்லாயிரவர் கலந்து கொண்டது ஆச்சரியமில்லைதான்.

திரு. பக்கிரிசாமிப் பிள்ளை, எம். எல். ஏ. அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், டி. வி. நாராயணசாமி ஆகியோர் பேசியதும், தோழர் நெடுஞ்செழியன் அவர்கள், வ. உ. சி. மன்றத்தைத் திறந்து வைத்து அரியதோர் உரை நிகழ்த்தினார். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் தொடர்ந்து பேசியதாவது:—

"இராமனை அவர்கள் '**வீரன்**' என்கிறார்கள்; நாங்கள் 'கோழை' என்கிறோம். முதலில், 'வீரம்' என்றால் என்ன என்று இலக்கணம் வகுத்துக் கொள்வோம்.

வள்ளுவர் யாரை வீரன் என்கிறார் என்றால் – எவனொருவன், எதிரியின் வேலோ வாளோ தன்னை நோக்கி, தன் கண்களை நோக்கிப் பாயவரும்போது கண்களை மூடாமல், இமைக்காமல், உறுதியோடு அவைகளின் தாக்குதலை ஏற்றுக் கொள்கிறானே, ஏற்றுக்கொள்ளும் உறுதியும், ஆற்றலும் பெற்றிருக்கிறானோ அவன்தான் வீரன் என்கிறார்.

கோப்பெருஞ் சோழன் என்ற தமிழ் மன்னன், வீரத்திற்குக் காவியம் தீட்டியிருக்கிறான் – தன் வாழ்நாளில்.

எதிரியின் அம்பு அவன் மார்பு வழி புகுந்து, முதுகுவழி வெளி வந்து விடுகிறது; என்றாலும், கோப்பெருஞ் சோழனுக்குத்தான் போரில் வெற்றி கிட்டுகிறது. எதிரி போர்க்களத்தில் முறியடிக்கப்பட்டு, எதிரியின் கோட்டையில் கோப்பெருஞ் சோழனின் வெற்றிக் கொடி பறக்கிறது; ஆனாலும், சோழனுக்கு ஒன்று உறுத்துகிறது – அதுதான், தன் மார்பு வழி புகுந்த எதிரியின் அம்பு, முதுகு வழி வெளிவந்ததினால், முதுகில் ஏற்பட்ட வடு; இந்த முதுகில் உள்ள வடுவினை, பிற்காலத்தில் யாரேனும் பார்த்து, 'போரிலே புறமுதுகு காட்டி, வடு பெற்று வாழ்கிறான் போலும், சோழன்,' என்று எண்ணிவிடக் கூடும்—தன் புகழுக்கும், வீரத்திற்கும் இழுக்கு நேரிடக் கூடும்—என்று அஞ்சிய அவன், நாடு விட்டுச் சென்று, வடக்கிருந்து உயிர் நீத்தான்—என்பது, தமிழகத்தின் வரலாறு; வீரத்திற்கு இலக்கணம்!

இந்த இலக்கண வழுவின்படி வீரமுடையவன்தானா, கடவுள் அவதாரமான இராமன்? ஏழு மராமரத்திற்கிடையிலிருந்து, வாலியை வதம் புரிகிறான்—கடவுள் அவதாரமான ராமன்; வாலி துடிக்கிறான்; செத்துக்கொண்டே ராமனைக் கடாவுகிறான்—'இராமா! நீ செய்வது வீரமா? மறைந்து நின்று என்னைக் கொன்றாயே நியாயமா? நீ ஒரு வீரன் தானா'? என்று!

இதற்கென்ன பொருள்? இராமன் 'வீரன்' அல்ல—இலக்கணப்படி என்றால், 'கோழை' என்பது சொல்லாமலே புலனாகிறதே!

பின்பு, இராவணனை எதிர்த்துச் சண்டையிடுகிறான் இராமன்; இராவணன், தன்னிடமுள்ள ஆயுதங்களை நம்பி சண்டையிடுகிறான்; இராமன் அப்படியா? இல்லையே! இராமனிடமுள்ள எந்த ஆயுதமும், இராவணனை எதுவும் செய்யவில்லை—செய்ய முடியவில்லை—கதைப்படி.

பிரம்மாவிடம் அல்லவா அஸ்திரம் பெற்று இராவணனை வதம் புரிகிறான், இராமன்? அப்படியானால்—இராவணனை வெல்ல இராமனுக்கு ஆற்றல், வீரம், வலிவு இருக்கவில்லை — என்பது தானே பொருள்?

இன்று சியாங்-கே-ஷேக், மீண்டும் சீனா மீது படையெடுத்து, அமெரிக்காவிடமிருந்து அணுகுண்டுகளை யாசகம் பெற்று, செஞ்சீனப் படைகள் மீது வீசி வெற்றி பெறுவதாக உதாரணத்திற்காக வைத்துக் கொள்வோம்;

அந்த வெற்றிக்கு காரணம் சியாங்கின் வீரமா? அல்லது வஞ்சகம் நிறைந்த தந்திரமா? என்ன சொல்வார்கள்?

இதே போன்றதுதான், சீதை கற்புக்கரசி என்பதும்; "சீதையின் கற்பை அவளது கணவனான இராமனே சந்தேகிக்கும்போது, நாம் சந்தேகப்படுவதில் தவறென்ன?" என்று தோழர் நெடுஞ்செழியன் கேட்டுவிட்டு, வால்மீகி இராமாயணத்தை மொழி பெயர்த்துள்ள பல அய்யங்கார்களின் புத்தகங்களிலிருந்து சான்றுகளை எடுத்துக் காட்டி, "அந்த வரலாற்று ஆசிரியர்களும், மொழி பெயர்ப்பாளர்களும் கூறியிருப்பதை நாங்கள் கூறும்போது, 'குத்துகிறது—குடைகிறது' என்று பக்தர்கள் ஓலமிடுவானேன்?" என்று வினவினார்.

"வரலாற்று ஆசிரியர்களுடையவும், மொழி பெயர்ப்பாளர்களுடையவும் கருத்துக்களை அடிப்படையாக வைத்து நடிக்கப்பட்டதுதானே இராதாவின் இராமாயணம்? அது கண்டு மனம் புண்படுகிறது என்றால், என்ன செய்வது? எழுதப்பட்டுள்ள கதை அப்படித்தானே இருக்கிறது? கதையையே அப்படி வைத்துக் கொண்டு, எங்களைக் குறைகூறுவதில் என்ன நியாயமிருக்க முடியும்?" என்று கடாவினார்.

துவக்கத்தில், வ. உ. சிதம்பரனாரின் விடுதலை வேட்கையை எடுத்துக் காட்டி, அந்த விடுதலை வேட்கையும், அறிவும், ஆற்றலும், நாட்டு மக்கள் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்ளும்போது, "இந்த நாட்டில் மக்களின் அவல நிலையை விளக்கிக் காட்டி, அந்த அவல நிலை மாற மக்களுடைய அறிவுக்கும், ஆற்றலுக்கும், நாட்டின் வளமிக்க பொருள்களுக்கும் நல்ல தொடர்பு ஏற்பட வேண்டும்—அந்தத் தொடர்பு ஏற்பட மக்கள் உள்ளத்தில் குடியிருக்கும் பழமை எண்ணங்கள் நீக்கப்பட்டு, பகுத்தறிவுக் கருத்துக்கள் நிலைபெற வேண்டும்—அதற்கு இதுபோன்ற மன்றங்கள் பாடுபட வேண்டும்," என்று எடுத்துக் கூறினார்.

அலுவலகத் திறப்பு விழா

2-1-55 காலை 9 மணிக்கு, சென்னை, திருவல்லிக்கேணி, எண் 4, நமசிவாய முதலி தெருவில், சென்னை 42-வது வட்ட தி. மு. கழகக் கிளையின் புதிய அலுவலகத் திறப்பு விழா தோழர் கு. ராசவேல் தலைமையில் நடைபெறும். திறப்பாளர்: ஜி. பெருமாள்; கொடியேற்றுபவர்: பு. அரங்கசாமி; அன்று படிப்பகத் திறப்பாளர்: இளம்பரிதி.

சொற் பயிற்சி கூட்டம்

2-1-55 காலை 8-30 மணியளவில், சென்னை, எண் 26, ஆலத்தூர் சுப்ரமணிய ஆச்சாரி தெருவில், ஊ. பு. அ. சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகச் சார்பில், 'தமிழ்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

*　*　*

1-1-55 மாலை 6-30 மணிக்கு, சென்னை 1-வது வட்ட தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் கலம் கின்சி தலைமையில் 'உள்ளமும் உறுதியும்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

குறள் நெறிக் கழகம்

1-1-55 காலை 10 மணிக்கு, சென்னை, இராயபுரம், எண் 59, மன்னார்சாமி கோவில் தெருவிலுள்ள பேட்டை கழக அறையில், தோழர் கு. தியாகராசன் தலைமையில் 'குறள் நெறி' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

2-1-55 காலை 10 மணிக்கு தோழர் கு. தியாகராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

நன்னாரிக் கழகம்

1-1-55 மாலை 5-30 மணிக்கு, சென்னை, திருவல்லிக்கேணி, எண் 9, சுப்பராயச் செட்டி தெருவில், தோழர் [illegible] தலைமையில், 'நாம் காணும் நாடு' என்பது பற்றி தோழர் கோ. திருமாவளவன் பேசுவார்.

பொதுக்கூட்டம்

2-1-55 மாலை 6-30 மணியளவில், கோவை, சித்தன் சந்த் திடலில், கோவை திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் பொதுக்கூட்டம் தோழர் ப. பழனிசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. ஆறுமுகம், பி. அப்பாசாமி, க. கண்ணன், தமிழ்மணி, மீனாட்சிசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

விருதை ந. இராமசாமி சுற்றுப்பயண நிகழ்ச்சி

கடையம் தி. மு. க. துவக்கவிழா

5—12—54ல், தென்காசியை அடுத்துள்ள கடையம் எனும் ஊரில் தோழர் ஆ. திராவிடமணி தலைமையில் நடைபெற்ற விழாவில் நெல்லைத் தோழர் எஸ் கந்தசாமி கழகக் கொடியேற்றிவைத்த பின், தோழர் குருசாமி விழாவைத் துவக்கிவைத்தார். பின்னர் தோழர் விருதை ந. இராமசாமி தி. மு. கழகக் குறிக்கோள் பற்றியும், கழக வளர்ச்சி பற்றியும் சொற்பொழிவாற்றினார்.

செங்கோட்டையில் திருமணம்

6-12-54ல், தோழர் நல்லையா—தோழியர் நவனீதத்தம்மாள் திருமணத்தை தோழர் தீனதயாளு தலைமையில், தோழர் ந. இராமசாமி நடத்திவைத்தார்.

கரியணம்பட்டி தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

8—12—54ல், குமாரவேல் திடலில், தோழர் எஸ். கே. சுப்பையா தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக் கூட்டத்தில், தி. மு. கழகக் கொள்கைகள், இலட்சியங்கள் குறித்துத் தோழர்கள் மதுரை எஸ். முத்து, விருதை ந. இராமசாமி சொற்பொழிவாற்றினர். ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது.

இளையான்குடியில் தி. மு. கழகத் துவக்க விழா

13—12—54ல், இவ்வூர் சாலை நகர் பொதுத் திடலில் தோழர் செ. சிக்கந்தர் தலைமையில், அனுமதி கிடைக்காததால் ஒலிபெருக்கி இல்லாமலேயே தோழர்கள் கே. எஸ். சந்தானம், ந. இராமசாமி ஆகியோர் பேசினர். இரவு 9 மணிக்கு ஒலிபெருக்கி அனுமதி கிடைத்தபின், மறுமுறையும் வேறொரு இடத்தில் தோழர்களிருவரும் சொற்பொழிவாற்றினர். அவர்களுக்கு கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

நெய்வேலி திட்ட நிர்வாகக் குழு

உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டன

சென்னை, டிச. 30—

நெய்வேலி நிலக்கரியை தோண்டவும், அத்துடன் இணைக்கப்படும் தொழில்களை அமைக்கவும், சென்னை – டில்லி சர்க்கார்களின் பிரதிநிதிகள் கொண்ட நிர்வாகக் குழு அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கீழ்க்கண்டவர்கள் சென்னை சர்க்காரின் உறுப்பினர்கள் ஆவர்:

மராமத்து இலாகா செயலாளர் டி. எம். எஸ். மணி; பொருளாதார இலாகா செயலாளர்: பி. எ[illegible] வர்கீஸ்; வர்த்தக, தொழில் அதிகாரி பி. கே. பழனியப்பன்.

தோழர் டி. எம். எஸ். மணி குழுவின் நிர்வாக அதிகாரியாக இருப்பார் என்று தெரிகிறது.

கீழ்க்கண்டவர்கள் டில்லி சர்க்காரின் பிரதிநிதிகளாக இருப்பார்கள் என்று தெரிகிறது:—

உற்பத்தி இலாகா கூட்டுச் செயலாளர் எஸ். ஜெகனாதன்; தொழில் ஆலோசகர் டாக்டர் நாகராஜ ராவ்; திட்டக் குழுவின் ஆலோசகர் ஈ. பி. மேனன்; பொருளாதார இலாக்கா கூட்டுச் செயலாளர் சி. வி. நரசிம்மன்; பொருளாதார இலாக்கா கூட்டுச் செயலாளர் (ரெவின்யூ) கே. ஆர். கே. அய்யங்கார்.

இக்குழு ஜனவரி 1-ந் தேதி முதல் இயங்கும் என்று தெரிகிறது. இக்குழுவிற்கென தனி அலுவலகம் ஒன்று இருக்குமென்றும் கூறப்படுகிறது.

சீனக் கலைஞர்களுக்கு விருந்து

தென்னாட்டு அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்துகொண்டனர்

சென்னை, டிச. 29—

சென்னை வந்திருக்கும் சீனக் கலைஞர் குழுவைப் பாராட்ட சென்னையில் உள்ள சீனத் தூதுவர் காரியாலயத்தினரால் இன்று மாலை கன்னிமரா ஓட்டலில் விருந்து ஒன்று அளிக்கப்பட்டது.

இந்த விருந்தில் சென்னை மாநிலத்தில் உள்ள அரசியல் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

சென்னை கவர்னர் பிரகாசா, முதல் அமைச்சர் காமராசர், கல்வி அமைச்சர் சுப்பிரமணியம், தோழர்கள் ப. ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, பி. கலியாணசுந்தரம், கே. டி. ராஜு, எஸ். குருசாமி, கே. ஏ. மதியழகன் ஆகியோர் இந்த விருந்தில் கலந்துகொண்டனர்.

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள், சமாதான மாநாட்டுத் தலைவர் டாக்டர் கிச்சுலு ஆகியோர் கலந்து கொண்டனர்.

தோழியர்கள் ஜி வரலட்சுமி, ராகினி போன்ற நடிகைகளும், தோழர்கள் டி. எஸ். துரைராஜ், ரஞ்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சீனக் கலைஞர் குழுவினரின் தலைவரும், இதர முக்கியஸ்தர்களும் விருந்து மண்டபத்தின் வாயிலில் நின்று தமிழர் முறைப்படி கரம்கூப்பி வணக்கம் செய்து விருந்தினர்களை வரவேற்றனர்.

விருந்தினர்களுடன் சீனக்கலைஞர்கள் சுமுகமாகப் பழகினர் என்பது குறிப்பிடத் தக்கது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,